**JM II Court, Erode** **Dt.22.07.2026**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No. 281/2026

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 22–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.ராஜ்குமார், குற்றவியல் நீதிமன்றம் எண்.II, ஈரோடு அவர்களால் ஆணையிடப்பட்டு, திரு.T.சரவணகுமார், பலகை எழுத்தர் நிலை – III அவர்கள் மூலமாக சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

Deposition of Witness PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வித்யாதரன் | தொழில் | : |
| த/க பெயர் | : | வயது | : |
| அலைபேசி | : | முகவரி | : |
| ஆதார் எண் | : | | |

**A1 , A2 present.**

**முதல் விசாரணை**

நான் ஈரோடு நகர காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 11.12.2025 அன்று உதவி ஆய்வாளர் கந்தசாமி, தலைமை காவலர் மாதேஸ்வரன் ஆகியோருடன் நானும் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக மரப்பாலம், காரை வாய்க்கால், வளையல் கார வீதி, VVCR நகர், பகுதிகளில் ரோந்து சென்று 13 மணிக்கு மாதவ கிருஷ்ணா வீதி, ராயல் ஸ்டேட் அருகில் சென்று கொண்டிருந்தபோது அங்கு இருந்த

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.22 11:12:50 +0530

டைலர் கடையில் இரண்டு பேர் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் செல்போனை பார்த்து வெள்ளை சீட்டில் எண்களை எழுதிக் கொண்டிருந்தனர். எங்களைப் பார்த்தவுடன் அவர்கள் அங்கிருந்து ஓட முயற்சி செய்தனர். அவர்களை பிடித்து நாங்கள் விசாரித்த போது அதில் ஒருவர் ரவி என்றும் மற்றொருவர் மாதேஷ் என்றும் கூறினார்கள். ஆஜர் எதிரிகள் தான் ரவி மற்றும் மாதேஷ் ஆவார்கள்.

மேற்கொண்டு அவர்களை விசாரித்த போது அவர்கள் கேரளா மாநில லாட்டரி சீட்டுகளை ரயில் நிலையம் அருகில் அடையாளம் தெரியாத நபரிடம் இருந்து வாங்கி வந்து பொதுமக்களிடம் காண்பித்து பேன்சி நம்பராக உள்ளது, இதை வாங்கினால் கட்டாயம் பரிசு விழும் என்று சொல்லி லாட்டரிகளை விற்பனை செய்வதற்கு வைத்திருந்ததாக கூறினார்கள்.

உதவி ஆய்வாளர் அவர்களுக்கு 35(3) அறிவிப்பு கொடுத்து காவல் நிலையத்தில் ஆஜராக சொல்லி கொடுத்த போது அவர்கள் அதை வாங்க மறுத்ததால், அவர்களை அதே இடத்தில் வைத்து 13.20 மணிக்கு கைது செய்தார். அப்போது ரவி அவர் வைத்திருந்த எண்கள் எழுதிய ஐந்து வெள்ளை துண்டு சீட்டுகளையும், Vivo செல்போனையும், 500 ரூபாய் பணத்தையும் ஆஜர் செய்தார். அவற்றை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்.

நானும் தலைமை காவலர் மாதேஸ்வரன் சாட்சி கையொப்பம். செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது என்னிடம் காட்டப்படும் எண்கள் எழுதப்பட்ட ஐந்து வெள்ளை துண்டு சீட்டுகள்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.07.22 11:12:57 +0530

Vivo செல்போனையும், மற்றும் 500 ரூபாய் பணம் ஆகியவற்றை ஆஜர் எதிரி ரவியிடமிருந்து கைப்பற்றப்பட்டவை ஆகும். **எண்கள் எழுதப்பட்ட 5 வெள்ளை துண்டு சீட்டுகள் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. செல்போன் மற்றும் 500 ரூபாய் பணம் சான்று பொருள் 1 முதல் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மாதேஸ்வரன் அவர் வைத்திருந்த எண்கள் எழுதிய ஐந்து வெள்ளை துண்டு சீட்டுகளையும், 250 ரூபாய் பணத்தையும் ஆஜர் செய்தார். அவற்றை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். நானும் தலைமை காவலர் மாதேஸ்வரன் சாட்சி கையொப்பம். செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**தற்போது என்னிடம் காட்டப்படும் எண்கள் எழுதப்பட்ட ஐந்து வெள்ளை துண்டு சீட்டுகள்** 250 ரூபாய் பணம் ஆகியவற்றை ஆஜர் எதிரி மாதேஷ் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்டவை ஆகும். **எண்கள் எழுதப்பட்ட 5 வெள்ளை துண்டு சீட்டுகள் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 250 ரூபாய் பணம் சான்று பொருள் 3 குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னிட்டு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரிகள் இருவரையும் 14.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண் 309/2025, சட்டப்பிரிவு112(2) BNS, 5r/w 7(3) TNLR act முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. உதவி ஆய்வாளரின் விசாரணைக்கு நான் உதவியாக இருந்தேன்.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.22 11:13:04 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவ இடம் பொதுமக்கள் அதிகம் நடமாடும் பகுதி என்றால் சரிதான். தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகள் எதையும் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் தொடர்பாக எதிரிகள் ஏமாற்றியதாக பொதுமக்கள் அல்லது தனி நபர் யாரும் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பொதுமக்கள் யாரையும் உதவி ஆய்வாளர் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

நான் முதல்விசாரணையில் சொல்லியது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகளை கைது செய்து எதிரிகளிடமிருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், புள்ளிவிவரக் கணக்கிற்காக எனது உயர் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் வழக்கிற்க்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜர் உள்ளிட்ட ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.22 11:13:11 +0530